# முல்லை நிலம் காட்டும் நீர் சார்ந்த உணவுகள்

7

**முனைவர் சு. அனுசுயாதேவி,**

**உதவிப்பேராசியர் தமிழ்த்துறை,**

**கோ.வெங்கடசுவாமி நாயுடு தன்னாட்சிக் கல்லூரி, கோவில்பட்டி– 628 502.**

**மின்னஞ்சல் : anushoumic@gmail.com**

ஆய்வுச் சுருக்கம்

உலகின் இயற்கை அமைப்பை ஒட்டி நிலங்களை ஐவகையாகப் பாகுபாடு செய்தனர். அவற்றில் காடும் காடுசார்ந்த இடமும் முல்லைத் திணை எனப்பட்டன. மனித இனத்தின் நாகரீக வளர்ச்சியின் இரண்டாவது நிலையான “ஆயர்நிலை” இவ்வாறு எய்தப்பட்டது. ஆநிரையைச் செல்வமெனப் போற்றும் முல்லை நிலத்தில்தான் சிற்றரசர்களும், வேளிர்களும் உருவானார்கள். அவ்வாறு உள்ள தொண்டை நாட்டு முல்லை நிலத்தார் பாலையும் திணையரிசிச் சோற்றையும் உண்டனர். முல்லை நிலத்துச் சிற்றூர்களில் இருந்தவர்கள் வரகரசிச் சோறும் அவரைப் பருப்பும் கலந்து செய்த “கும்மாயம்’ எனப் பெயர் பெற்ற உணவை உண்டனர். நன்னனது மலைநாட்டு முல்லை நிலத்தார் சிவந்த அவரை விதைகளையும் மூங்கிலரிசியையும் மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லின் அரிசியையும் புளி கரைக்கப்பட்ட உலையிற் பெய்து குழைந்த புளியங்கோலாக்கி உண்டனர். பொன்னை நறுக்கினாற் போன்ற நுண்ணிய ஒரே அளவுடைய அரிசியை வெள்ளாட்டு இறைச்சியுடன் கூட்டி ஆக்கிய சோற்றையும் திணை மாவையும் உண்டனர். ஆடு, மாடு மேய்ப்பவர்களுக்கே முல்லைநிலம் ஏற்றதாகும். முல்லை நில ஆடவர் பகல் முழுவதும் கால்நடைகளை மேய்த்துக் கொண்டிருப்பர். மாலையில் அவற்றுடன் வீடு திரும்புவர். முல்லை நில மகளிர் பால் கறத்தல், பாலைக் காய்ச்சித் தயிராக்குதல், தயிரைக் கடைந்து மோராக்குதல், வெண்ணெய் எடுத்தல் நெய் காய்ச்சுதல், இவை அனைத்தையும் எடுத்துச் சென்று பிற நிலங்களில் விற்று, வேண்டும் பொருட்களை வாங்கிக் கொண்டு மீளுதல் ஆகிய வேலைகளில் ஈடுபட்டிருப்பர். இவ்வாறு எத்தனை உணவுகள் இருந்தாலும் முல்லை மக்களின் வாழ்க்கை முறை நீர் சார்ந்த உணவாகவே இருந்தது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

முன்னுரை

சங்க இலக்கியங்களைத் திணைகளின் அடிப்படையில் ஐந்து வகையாகப் பிரிந்துள்ளனர். ஐந்திணைகளில் ஒன்று முல்லை நிலம் ஆகும். நீர் தொடர்பான உணவு வகைகளை முல்லை நில மக்கள் பயன்படுத்தியதனை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

முல்லை நிலம்

முல்லை என்பது பண்டைத் தமிழகத்தில் அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். காடும் காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலமாகும். செம்மண் பரந்திருப்பதால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்படுகிறது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப்

பெயரிடப்பட்டது "மாயோன் மேய காடுற உலகமும்" எனத் தொல்காப்பியம் முல்லை நிலம் பற்றிக் கூறுகிறது.

"இந்நிலம் குறிஞ்சி, பாலை ஆகிய வலிய நிலங்களுக்கும் மருதம், நெய்தல் ஆகிய மென்மையான நிலங்களுக்கும் இடைப்பட்ட இயல்பினது. ஆதலால் இடைநிலம் என பெயர் பெறும்" என்று சங்க காலத் தமிழர் வாழ்வு என்னும் நூலில் இராமநாத செட்டியார் குறிப்பிடுகின்றார். முல்லை நில நீர் உணவாக நீர், பால், தயிர், வெண்ணை, நெய், கள்ளு ஆகியவை கருதப்படுகின்றன.

நீர்

நீர் தோன்றக் காரணம் மழையாகும். காடு சார்ந்த நிலங்களின் மழைப் பெய்வது இயற்கையான ஒன்றாகும். நீர் தங்கியிருக்கும் இடங்களை நீர்த் தடாகங்கள் அல்லது நீர் நிலைகள் என்று அழைக்கலாம். முல்லை நிலக் கவிதைகளில் நீர் உணவு மனிதர்கள் மட்டுமன்றி மான் போன்ற விலங்குகளும் உண்டதை இயற்கை நயத்துடன் புலவர் படம் பிடித்துக் காட்டுகிறார். இதனை,

"இரும்பு திரித்தன்ன மா இரு மருப்பின்
பரல் அவல் அடைய இரலை, தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக் கொடுப்ப"(அகம்.பா.4)

என்னும் பாடல் அடிகளால் குறுங்குடி மருதனார் தெரியப்படுத்துகிறார். இதன் கருத்தை,

"வன்பரற் தள்அறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந்து உகனத்
தான் வந் தன்றே தளி சூடு தண்கார்" (குறு.பா..65)

எனும் பாடல் அடிகள் மூலம் முல்லை நில மான்கள் நீர் நிலைகளில் நீர் உண்டதைப் புலவர்கள் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

சங்க காலத்தில் தானம் செய்யும் போது நீரையும் தானம் செய்தனர் என்பதனை

"கார் எதிர் புறவினதுவே உயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவற்கும்
வரைகோள் அறியாச் சொன்றி
நிறை கோற் குறுந்தொடி தந்தை ஊரே"(குறு.பா..233)

என்னும் பாடல் அடிகள் மூலம் சங்கத் தமிழ் புலவர் பேயன் வெளிப்படுத்துகிறார்.

பனை நுங்கு நீர்

சங்க கால மக்கள் பனைநுங்கு நீரையும் உண்டனர். மருந்தும் சுவைநீரும் பனை நுங்கின் தன்மை ஆகும்.இதனை

"பிடிதுஞ்சு அன்ன அறை மேல நுங்கின்
தடிகண் புரையும் குறிஞ்சுனை ஆடி
பனிப் பூந்தளவொடு முல்லை பறித்து"(கலி.பா..108)

என்னும் பாடல் அடிகளில் அருவி நீரை நுங்கின் வெட்டிய கண்ணை உவமிக்கிறார்.

பால்

நீர் உணவுகளில் முக்கியமான இடத்தைப் பெறுவது பால் உணவு ஆகும். முல்லை நிலக் கவிதைகளில் பால் உணவுகளாக தாய்ப்பால், எருமை, பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய உணவு பொருட்கள் குறிக்கப் பெறுகின்றன.

தாய்ப்பால்

பொண்ணாகப் பிறந்து வளர்ந்து குமரியாகியபின் மணம் முடிந்து தாயாகும் போது அவள் மார்பில் சுரக்கும் பாலே தாய்ப்பால் ஆகும். தாய்ப்பால் குறித்து சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பிள்ளைகளுக்குப் பால் கொடுக்காவிடின் தனியே சுரந்து களையும். இதனை முல்லை நில உரிப்பொருளான இருத்தலோடு தொடர்புபடுத்தி புலவர்கள் கவிதைகள் படைத்துள்ளனர். தாய்ப்பாலை முல்லைப் பால் என்றும் அழைப்பர். இதனை,

“வாள் நுதல் அரிவை மகன் முலை ஊட்ட
தான் அவள் சிறுபுறம் சுவையினன்”(ஐங்.பா..404)

என்னும் அடிகளால் அறியலாம்.

“அழுத பிள்ளைக்குத்தான் பால்”

என்பது பழமொழி, இப்பழமொழியை உணர்த்தி நின்றாற் போல் ஐங்குறுநூறு கவிதை பின்வருமாறு விளக்குகிறது.

“ஒன் நுதல் பசப்ப நீ செலின், தெண் நீர்ப்
போது அவிழ் தாமரை அன்ன நின்
காதல் அம் புதல்வன் அழும் இனி
முலைக்கே” (ஐங்.பா..424)

என்னும் பாடல் அடிகளால் முல்லை நிலப் புலவர் பேயனார் காட்சிப்படுத்துகிறார்.

பசுவின் பால்

முல்லை நிலத்தில் மேயும் பசுக்களில் இருந்து வரும் பால்களையும் உணவாக முல்லை நில மக்கள் பயன் படுத்தினர். மேலும் பால் மூலம் கிடைக்கும் தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய உணவுக் குறிப்புகளையும் முல்லை நிறப் பாடல்களில் பதிவு செய்துள்ளனர்.

பசுவின் குட்டியை கன்று என்று அழைப்பர். பசு உணவிற்காகப் புல் மேய்தலுக்கு சென்றிருக்கும் மாலைப் பொழுதில் கன்றுகள் பசுவின் வரவை எதிர்பார்த்து இருக்கும் இச்சூழலை

“பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
புன்தலை மன்றம் நோக்கி மாலை
மடக்கண் குழவி அலம் வந்தன்ன” (குறு.பா..64)

எனும் பாடல் அடிகள் சான்று காட்டுகின்றன. பால் தரும் பசுக்களைப் பாற்ப்பசுக்கள் என்று அழைத்தனர். இதனை

“கார்ப்புறந்தந்த நீருடை வியன் புலத்துப்
பல்ஆ புகுதரும் புல்லென் மாலை”(குறு.பா.162)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. பாலை ஊற்றி வைப்பதற்கென்று கலங்கள் இருந்தன என்பதனையும் அதனை “உறி” என்று அழைத்தனர். இதனை

“கழுவொடு சுடு படை சுருக்கிய தோற்கண்
இமிழ் இசை மண்டை உறியொடு தூக்கி” (கலி- மு .க.பா.6)

என்னும் பாடல் அடிகளால் அறியலாம்.அதிகம் பால் தரும் பசுவை இது குடம் பால் தரும் என்று சிறப்பிப்பர். இதனை

“எல்லாஇஃது ஒன்று கூறு குறும்பு இவர்
புல்லினத்தார்க்கும் குடம் சுட்டவர்க்கும் எம்
கொல் ஏறு கோடல் குறை”(கலி- மு .க.பா7)

என்னும் பாடல் அடிகள் சான்று பகர்கின்றன.

பால் - பலி செலுத்துதல்

பலி உணவை பிரதிபலிக்கும் சங்கப் பாடல்கள் பல பாலையும் பலிப் பொருட்களை உட்படுத்துவர் என்பது முல்லை நிலப்பழக்கமாகும் என்பதை

“நுண்ணிதாத் தோன்றும், நுசுப்பு
இடை தெரியா ஏஎர் இருவரும் தத்தம்
உடைவனப்பு எல்லாம் இவட்கு ஈந்தார் கொல்லோ?
படை இடுவான்மன் கண்டீர், காமன் மடை அடும்
பாலொடு கோட்டம் புகின்” (கலி- மு .க.பா.9)

என்னும் பாடல் அடிகளில் கடவுளுக்குப் பலியாக பாலையும் பயன்படுத்தினர் என்பது புலனாகும்.

தயிர்க்குழம்பு

குழம்பு வகைகளில் ஒன்று தயிர்க் குழம்பு ஆகும். முல்லை நில மக்கள் தயிரைக் குழம்பாக உண்டனர். இதனை

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுஉறுகலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”(குறு.பா.167)

என்னும் குறுந்தொகைப் பாடலில் தலைவி தலைவனுக்கு விருந்து உணவாகத் தயிர் குழம்பை தயார்படுத்துகிறார். இன்று “மோர்க்குழம்பு” என்று அழைக்கப்படுகிறது.

கூழ்

ஆடுகளை மேய்க்கும் இடையர்களுக்கு மதிய உணவு என்பது கூழ் ஆகும். கூழை உண்பதற்குக் கறியாக பாலை உண்டதை,

“பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்”(குறு.பா.221)

என்னும் பாடல் அடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

மோர் விற்றல்

முல்லை நிலத்துப் பண்டமாற்றும் தொழிலாக மோர் விற்றலைக் கூறலாம். பால் வாங்காத இல்லங்களில் மோரை மட்டும் வாங்கும் பழக்கம் இன்றும் வழக்கத்தில் உள்ளது. முல்லை நிலத் தலைவி மோர் விற்றதை

“இகல் வேந்தன் சேனை இறுத்த வயல்போல
அகல், அல்குல் தோள் கண் என மூவழிப் பெருகி
நுதல், அடி, நுசப்பு என மூவழிச் சிறுகி
அகலாங்கண் அளைமாறி, அலமந்து
பெயருங்கால்”(கலி.மு.க.பா.8)

என்னும் பாடல் அடிகளில் மோர் விற்கும் முல்லை நில மகளிரின் உடல் அடையாளங்களையும் புலவர் கூறியிருப்பது மோர் கடைந்த புனைவின் அடையாளமாகும். மோர் கடைந்த ஒலியானது நண்பகல் வேளையில் ஊரில் கேட்கும் இதனை,

“வெண்ணெய்த் தெழிகேட்கும் அண்மையால்
சேய்த்து அன்றி,
அண்ணணித்து ஊர் ஆயின் நண்பகல்
போழ்து ஆயின்”(கலி.மு.க.பா.8)

என்னும் பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

கள்

முல்லை நில மக்கள் கள் அருந்தி மகிழ்வாக வாழ்ந்தனர் என்பதை முல்லை நிலக் கவிதைகள் பிரதிபலிக்கின்றன. குறுந்தொகை முல்லை நிலப் பாடல் கள்ளை “மட்டம்” என்று குறிப்பிடுகிறது. இதனை

“மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டு வாய்ச் சுனைய பகுவாய்த்தேரை
தட்டைப் பறையின் கறங்கும் நாடன்”(குறு.பா.193)

என்று பாடல் சான்றாகின்றது. கலித்தொகையின் கள்ளுண்ட ஆண்மகன் உவமையாக படிந்துள்ளதை,

“தோழி நாம், காணாமை உண்ட
கடுங்கள்ளை, மெய்கூர
நாணாது சென்று நடுங்க உரைத்தாங்குக்
கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம்

கண்டாய்"(கலி.மு.க.பா.15)

என்னும் பாடல் விளம்புகின்றன. கடின வேலை செய்யும் தொழிலாளர்கள் கள் குடிப்பது வழக்கம். இது சங்க காலத்தில் இருந்த பழக்கமாகும். இதனை,

"எரி புரை பல் மலர் பிறழ வாங்கி
அரிஞர் யாத்த அலங்கு தலைப் பெருஞ்சூடு
கள் ஆர் வினைஞர் களம்தொறும் மறுகும்"(அகம்.பா.84)

என்னும் பாடல் அடிகள் மூலம் சங்கப் புலவர் மதுரை எழுத்தாளன் குறிப்பிட்டுள்ளார். அகநானூறு கள்ளை "அரியல்" என்று குறிப்பதை

"கோடுடைக் கையர் துளர்எறி வினைஞர்
அரியல் ஆர்கையர் விளைமகிழ் தூங்கச்
செல்கதிர் மழுகிய உருவ ஞாயிற்று"(அகம்.பா.184

என்னும் பாடலின் இரண்டாம் அடியின் முதல் சீர் சான்றாகிறது இங்ஙனம் எட்டுத்தொகை நூலில் உணவு குறித்தான விருந்தோம்பும் குறிப்புக் காணப்படுகிறது.

முடிவுரை

நீர் உணவுகளாக பால், தாய்ப்பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், கள், பனை, நீர் ஆகியவை முல்லை நில மக்கள் பயன்படுத்தி இருந்தனர். தாய்ப்பால் கொடுக்கும் தலைவியின் உணர்வுகள் சிறந்த நாகரிக நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மோர் விற்றல் முக்கியமான பண்டமாற்றுத் தொழிலாக முல்லை நிலத்தில் குறிக்கப் பெற்றுள்ளன. மோர் விற்றதின் மூலம் நெல்லும், கள்ளும் கிடைத்தன. விவசாயம் செய்யும் மக்கள் கள் அருந்தி மகிழ்ந்ததாகக் கவிதைகள் தெரிவிக்கின்றன. மக்கள் ஒன்றாகத் தங்கிய நிலையை இங்கு நாம் அறிகின்றோம்.

பார்வை நூல்கள்

இராமநாத செட்டியர் சங்க காலத் தமிழர் வாழ்வு வெள்ளையன் பதிப்புக் கழகம், இராமநாதபுரம் மாவட்டம். முதல் பதிப்பு– 1957.

அகநானூறு – 3 தொகுதிகள் - மாணிக்கனார் அ. வர்த்தமானன் பதிப்பகம் ஏ.ஆர் அள் காம்ப்பெளக்ஸ், 141 உஸ்மான் சாலை தி. நகர், சென்னை – 600 017.இரண்டாம் பதிப்பு – 2001.

கலித்தொகை – முதல் பாகம், இரண்டாம் பாகம் மாணிக்கனார் அ, வர்த்தமானன் பதிப்பகம்,ஏ.ஆர், ஆர் காம்ப்ளெக்ஸ் 141, உஸ்மான் சாலை, தி. நகர் சென்னை- 600 017 முதற்பதிப்பு – 1999.

குறுந்தொகை – சண்முகம் பிள்ளை மு. பதிப்பாசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறு அச்சு – 1994

ஐங்குறுநூறு – தட்சிணாமூர்த்தி அ. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட், அம்பத்தூர் சென்னை – 600 098. முதல்பதிப்பு – 2004.